# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 92 | 4 Pages | 04.11.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 92 | 4 பக்கங்கள் | 04.11.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு வாகனம்: கலெக்டர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

திருப்பூர், நவ. 4

மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் பெருந்திட்ட வளாகத்தில் வேளாண் பெருமக்களுக்கு பயிர்காப்பீடு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டப்பணிகளை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். வேளாண் உற்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்ற அனைத்து திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாக கொண்டு சேர்த்திட மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வேளாண் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




வேளாண் பெருமக்களுக்கு பயிர் பாதுகாப்பை அதிகரிக்கவும், பயிர் காப்பீடு மூலம் விவசாயிகளுக்கு அதிக அளவிலான பயனை உறுதி செய்யும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றையதினம், திருப்பூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் தொடர்பாக வேளாண் பெருமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரச்சார வாகனம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சார வாகனம் முதல் கட்டமாக உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், தாராபுரம், காங்கேயம் மற்றும் வெள்ளக்கோயில் ஆகிய பகுதிகளுக்கு நவம்பர் 15 ஆம் தேதி வரை நெல் பயிர் காப்பீடு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நவம்பர் 16 முதல் டிசம்பர் 15 வரை திருப்பூர், மூலனூர், குடிமங்கலம், பொங்கலூர், குண்டடம், பல்லடம், அவிநாசி மற்றும் ஊத்துக்குளி ஆகிய பகுதிகளுக்கு நிலக்கடலை, கொத்துமல்லி, மிளகாய், தக்காளி, வெங்காயம், வாழை, மரவள்ளி, கொண்டைக்கடலை, மக்காச்சோளம், சோளம் ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்து தொடர்பாக வேளாண் பெருமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

மேலும், பயிர் காப்பீடு தொகை மற்றும் காப்பீடு செய்ய கடைசி நாள் போன்ற விபரங்கள் இவ்வாகனம் மூலம் வேளாண் பெருமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். எனவே வேளாண் பெருமக்கள் பயிர் காப்பீடு தொடர்பான விபரங்களை தெரிந்து கொண்டு பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மை) எம்.மாரியப்பன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணவேணி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரவி, வேளாண்மை அலுவலர் சீதா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் வாக்குச்சாவடி மையங்களில் முகாம்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ. 4

01.01.2024நாளினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2024 மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட காலஅட்டவணைப்படி27.10.2023 (சனிக்கிழமை) அன்று திருப்பூர் மாவட்டத்திலுள்ள எட்டு (8) சட்டமன்றத் தொகுதிகளுக்குரிய வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட எட்டு சட்டமன்றத்தொகுதிகளிலும் உள்ள அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பாக சிறப்பு முகாம்; நடைபெற உள்ளது

மேலும், எதிர்வரும் சிறப்பு முகாம் நாட்களில்; ஜனவரி 1ம் தேதியன்று18வயதுபூர்த்தியடையும் வாக்காளர்களும் மற்றும் அடுத்த ஆண்டு அதாவது 2024 ஆண்டின் ஏப்ரல் 1ம் தேதி, ஜீலை 1ம் தேதி, அக்டோபர் 1ம் தேதி 18 வயது பூர்த்தியடையும் வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கானபடிவம்6யைபூர்த்தி செய்துமுன்னதாகவேஅளிக்கலாம், மேற்படி முன்னதாக வரப்பெற்ற படிவங்கள் (அடுத்தாண்டில் தகுதி நாள் அடையும்) சேகரிக்கப்பட்டு அவை அந்தந்த காலாண்டின் துவக்கத்தில் (ஏப்ரல், ஜீலை, அக்டோபர்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படும்.

சிறப்பு முகாம் நாளன்று, வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்ய விரும்புவோர், பெயர் நீக்கம் செய்ய விரும்புவோர் மற்றும் ஒரே தொகுதிக்குள் குடியிருப்பு மாறியவர்கள், முகவரி மாற்றம் செய்வது போன்ற கோரிக்கைகள் தொடர்பாக, கீழ்க்கண்ட படிவங்களில் உரிய ஆவணங்களை இணைத்து வாக்குச்சாவடி மையங்களில் விண்ணப்பிக்கவும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க படிவம் 6

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்ய படிவம் 7

ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்ய ஃ

ஒருசட்டமன்றதொகுதியிலிருந்து மற்றொரு சட்டமன்ற தொகுதிக்கு முகவரி மாற்றம் செய்ய மற்றும் வாக்காளர் பட்டியலில் உள்ள விபரங்களை திருத்தம் செய்ய படிவம் 8

பொதுமக்கள் https://voters.eci.gov.in என்றஇணையதளம்மூலமாகவும், Voter Helpline App என்ற மொபைல் செயலி மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். சிறப்பு முகாம் தினத்தன்று பொது மக்கள் கீழ்க்கண்ட அலுவலர்களை தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக தொடர்பு கொண்டு விபரங்களை தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் 04212971110 கட்டணமில்லா தொலைபேசி எண்:1950 சட்டமன்றத் தொகுதி உதவி வாக்காளர் பதிவு அலுவலர் வாக்காளர் பதிவு அலுவலர்

101தாராபுரம் (தனி) வட்டாட்சியர், தாராபுரம் 04258220399 94450 00565 வருவாய் கோட்டாட்சியர் தாராபுரம். 04258220216, 94450 00440

102 காங்கயம் வட்டாட்சியர், காங்கயம் 04257230689. 94450 00566. 112 அவினாசி (தனி) வட்டாட்சியர், அவிநாசி 04296 273237, 94450 00575 சார் ஆட்சியர் (பொ), திருப்பூர். 04212200151, 94450 00443

113திருப்பூர் (வடக்கு), வட்டாட்சியர்,திருப்பூர் (வடக்கு) 04212200553, 94450 00574

115 பல்லடம் வட்டாட்சியர், பல்லடம் 04255253113. 94450 00573 114 திருப்பூர் (தெற்கு), உதவி ஆணையர், மாநகராட்சி, திருப்பூர் 04212374466, 94433 78687 ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி 04212242101, 96777 82255, 125உடுமலைப்பேட்டை வட்டாட்சியர், உடுமலைப்பேட்டை 04252223857, 94450 00578, வருவாய் கோட்டாட்சியர், உடுமலைப்பேட்டை 04252 230630, 94438 28723, 126 மடத்துக்குளம் வட்டாட்சியர், மடத்துக்குளம் 04252252588, 9789970572

## உடுமலை உழவர் சந்தையை விரிவாக்கம் செய்ய விவசாயிகள் கோரிக்கை

உடுமலை:, நவ. 4

திருப்பூர் மாவட்டம் உடுமலை கபூர்கான் வீதியில் உழவர் சந்தை உள்ளது. சந்தைக்கு சுற்றுப்புற கிராமங்களைசேர்ந்தவிவசாயிகள் காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நாள்தோறும் புத்தம் புதியதாக காய்கறிகள் கிடைப்பதால் உடுமலைநகரம்மற்றும்சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த பொதுமக்களும்உழவர்சந்தைக்கு வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

இதன் காரணமாக உழவர் சந்தையில் காய்கறிகள் விற்பனை சீரான முறையில் இருந்து வருகிறது. அந்த வகையில் கடந்த அக்டோபர் மாதம் 7 லட்சத்து 28 ஆயிரத்து 225 கிலோ



காய்கறிகளும், 90 ஆயிரத்து 920 கிலோ பழ வகைகளும் ஆக மொத்தம் 8 லட்சத்து 19 ஆயிரத்து 145 கிலோ வரத்து வந்துள்ளது. அதன்படி ரூபாய் 3 கோடியே 24 லட்சத்து6ஆயிரத்து725ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனையாகி உள்ளது.

சந்தைக்கு 2 ஆயிரத்து 274 விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்துள்ளனர். அதை ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 3 பொதுமக்கள் வாங்கி சென்று உள்ளனர்.

காய்கறிகள், பழங்கள் தரமாக கிடைப்பதால் உழவர் சந்தைக்கு வருகைதருகின்றபொதுமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் மேலும் உழவர் சந்தையை விரிவாக்கம் செய்து கடைகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தி மக்களின் நெரிசலை தவிர்க்க வேண்டும் என்று அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இஸ்ரேல் கொடூர தாக்குதலில் 14 பாலஸ்தீனியர்கள் பலி: ஹமாஸ் அறிவிப்பு



இஸ்ரேல்,நவ. 4

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த சில வாரங்களாக இருதரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்திவருகின்றன.அந்தவகையில்இஸ்ரேல்இன்றுநடத்தியதாக்குதலில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி எல்லையை கடந்து சென்ற பாலஸ்தீனியர்களில்14பேர்கொல்லப்பட்டனர்எனஹமாஸ்அமைப்பின் சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்து இருக்கிறது.

இது குறித்து ஹமாஸ் சுகாதாரத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அஷ்ரஃப் அல் கத்ரா வெளியிட்டு இருக்கும் அறிக்கையில், "இஸ்ரேல் இன்று நடத்திய மிகக் கொடூரமான தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் என இடம் பெயர்ந்த மக்கள் 14 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்," என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவின் கடற்கரை பகுதியை ஒட்டிய சாலையில் பயங்கர சேதத்தை ஏற்படுத்தியது. முன்னதாக இங்கு இருப்பவர்களை தெற்கு நோக்கி செல்லுமாறு இஸ்ரேல் ராணுவம் தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

## வடமேற்கு பாகிஸ்தானில் காவல்துறையை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல்: 5 பேர் பலி



பாகிஸ்தான், நவ.4

வடமேற்குபாகிஸ்தானில்தேராஇஸ்மாயில்கான்நகரில்காவல்துறையை குறிவைத்து வெடி குண்டு வீசப்பட்டது. இதில், 5 பேர் கொல்லப்பட்டனர். 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அப்பகுதியில், போலீசார் ரோந்து செல்லும் பாதையில் வெடிகுண்டு வெடித்ததாக போலீஸ் அதிகாரி முகமது அட்னான் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவம் தற்கொலைப்படை தாக்குதலா அல்லது வெடிகுண்டு வைக்கப்பட்டதா என்பது உடனடியாக தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

டேரா இஸ்மாயில் கான் நகரம் ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ள சட்டமற்ற பழங்குடி மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இது நீண்ட காலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இஸ்லாமிய போராளிகளின் தாயகமாக உள்ளது.

## எலான் மஸ்க் மகனுக்கு இந்திய ஆய்வாளரின் பெயர்.. மத்திய மந்திரி சொன்ன சுவாரஸ்ய தகவல்



பிரிட்டன், நவ.4

டெஸ்லா நிறுவன தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் இன் குடுபத்தில் இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுஉள்ளது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை மந்திரி ராஜீவ் சந்திரசேகரை சமீபத்தில் சந்தித்து பேசிய எலான் மஸ்க், இது குறித்த தகவலை தெரிவித்தார். பிரிட்டனில் நடைபெற்ற இந்த சந்திப்பு குறித்து எக்ஸ் தளத்தில் மத்திய மந்திரி ராஜீவ் சந்திரசேகர் பதிவிட்டுள்ளார்.

இது குறித்த பதிவில், "பிரிட்டனில் நடைபெற்ற ஏ.ஐ. பாதுகாப்பு கருத்தரங்கில் யார் கலந்து கொண்டிருக்கிறார் என்று பாருங்கள். எலான் மஸ்க் தனது மகனுக்கு சந்திரசேகர் என்று பெயரிட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்தார். 1983ம் ஆண்டு நோபல் பரிசு வென்ற இயற்பியலாளர் எஸ் சந்திரசேகரை தழுவி இவ்வாறு செய்ததாக அவர் தெரிவித்தார்," என்று குறிப்பிட்டுள்ளார்.

இவரது பதிவுக்கு பதில் அளித்த எலான் மஸ்க் மனைவி ஷிவோன் ஸில்லிஸ், "இது உண்மை தான். நாங்கள் அவனை சுருக்கமாக சேகர் என்று அழைக்கிறோம், ஆனால் இந்த பெயரை சுப்பிரமணியன் சந்திரசேகரின் நினைவாக வைத்திருக்கிறோம்," என்று குறிப்பிட்சுள்ளார்.

# உடுமலைப்பேட்டை வட்டத்திற்குட்பட்ட பல பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார்கள்

திருப்பூர், நவ. 4

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, சங்கரமாநல்லூர் அரசு தோட்டக்கலைப் பண்ணை, உடுமலைப் பேட்டை பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்கள்.



மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிக்சைக்கு வரும் நோயாளிகளின் பதிவு குறித்தும், மருந்து இருப்பு ஆகிய விபரங்கள் தொடர்பாக மருத்துவரிடம் கேட்டறிந்து, ஆய்வகம், மருந்தகம், உள்நோயாளிகள் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு போன்றவற்றை ஆய்வு மேற்கொண்டும்,

தொடர்ந்து, உடுமலைப் பேட்டை அமராவதி சர்க்கரை ஆலையின் செயல்பாடுகள் குறித்தும், ஆலையின் பராமரிப்பு, அரவைத்திறன், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, விவசாயப் பரப்பளவு உள்ளிட்டவைகள் குறித்தும் மற்றும் அமராவதி சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் உற்பத்தி திறன் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, ஆலையை நன்கு பராமரித்து உற்பத்தி திறனை அதிகரிக்க இந்த ஆய்வின்போது அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், மடத்துக்குளம் வட்டம், சங்கரமாநல்லூரில் தோட்டக்கலைத் துறையின் அரசு தோட்டக்கலைப் பண்ணை 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பண்னணையில் நமது மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான தோட்டக்கலைத் துறையின் மூலம் வழங்க வேண்டிய காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தாய் செடிகள் பராமரிக்கப்பட்டு வரும் இடங்களையும் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும் நிழல் வலை கூடாரங்களையும் குழுத்தட்டு நாற்றுகளையும் ஆய்வு மேற்கொண்டும்,

பண்ணையில் மூன்று ஏக்கர் பரப்பளவில் மா கொய்யா மாதுளை மற்றும் எலுமிச்சை போன்ற பல செடிகளின் தாய் செடிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓர் இரண்டு ஆண்டுகளில் இந்த தாய் செடிகளை ஆதாரமாகக் கொண்டு பல செடி நாற்றுகள் ஒட்டு கட்டுதல் முறையில் பதியன் போடுதல் முறையிலும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், தற்பொழுது உள்ள நிழல்வளை கூடார அமைப்பினை பயன்படுத்தி தோட்டக்கலை துறையின் மானியத் திட்டங்களுக்கு தேவையான காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் சுமார் 400 எக்டர் பரப்பளவுக்கு தேவையான காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே உள்ள நீர் ஆதாரங்களுடன் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும் பண்ணைப் பணியில் ஆர்வம் உள்ள பணியாளர்களை சேர்த்தும் பண்ணையின் உற்பத்தியினையும், நாற்றுகளின் தரத்தையும் அதிகரிக்குமாறு தோட்டக்கலை துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, உடுமலைப்பேட்டை நகராட்சியில் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்து பொது மக்களுக்கு வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

# பழங்குடியினர்ஆதிதிராவிடர் ஆவின் பாலகம் அமைக்க மானியத்துடன் கடன் உதவி

திருப்பூர்: நவ.4

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில் தொழில் முனைவோரின் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவர், ஆவின் பாலகம் அமைத்தல் மற்றும் விவசாய நிலம் வாங்குதல் போன்ற திட்டங்களுக்கு தாட்கோ வழியே மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப்படுகிறது.

100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராகவும் அத்துடன் கூடுதலாக இதர கட்டுமான பொருட்கள் மூலம் விற்பனை செய்து வருவாய் ஈட்டும் வகையில் ஆதிதிராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 சதவீதம் அல்லது அதிக பட்சம் ரூ.2.25 லட்சம் மானியமும் பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.3.75 லட்சம் மானியமும் விடுவிக்கப்படும்.

50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உறைவிப்பான், குளிர்விப்பான் போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ஆவின்பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிடும் வகையில் ஆதிதிராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.2.25 லட்சம் மானியமும் பழங்குடியினருக்கு திட்டத்தொகையில் 50 சதவீதம் அல்லது ரூ.3.75 லட்சம் மானியமும் விடுவிக்கப்படும்.

200 நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்களுக்கு சமூக பொருளாதார நிலையில் மேம்பாட்டு அடையும் பொருட்டு அவர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50 சதவீதம் (விழுக்காடு) அல்லது அதிகபட்சம் ரூ.5 லட்சம் வரை ம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பொருளாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தாட்கோ இணையதள முகவரியில் விண்ணப்பம் செய்ய வேண்டும் (www.tahdco.com).

மேலும் விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம் .

மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ, அறை எண்:501 (ம) 503,5 வது தளம், மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, திருப்பூர் 641 604 என்ற முகவரியையும், 94450 29552, தொலைபேசி எண்: 04212971112 ஆகிய செல்போன்தொலைபேசி எண்களையும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தையை கடித்து குதறிய வெறிநாய்கள்

திருப்பூர், நவ. 4

திருப்பூர் மாநகரம் பெரியாண்டிபாளையம் பிரிவு அருகே உள்ள ஆண்டிப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் செல்வகுமார். கட்டிட தொழிலாளி. இவருக்கு திருமணம் ஆகி, 2 பெண் குழந்தைகள் உள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று நைனிகா (வயது 2) என்ற பெண் குழந்தை தனது வீட்டின் வாசல் முன்பு விளையாடிக்கொண்டிருந்தாள்.


அப்போது திடீரென 5 வெறிநாய்கள் அப்பகுதிக்கு வந்தது. வந்தவேகத்தில் குழந்தையை சரமாரியாககடிக்கதொடங்கியது. இதில் குழந்தை வலி தாங்க முடியாமல் கதறினாள். கதறல் சத்தம் கேட்டு அப்பகுதியை சேர்ந்தவர்கள் ஓடோடி வந்து அங்குள்ள வெறி நாய்களை துரத்தினர்.

இதில் குழந்தைக்கு கை, கால் பகுதிகளில் பலத்த காயம்ஏற்பட்டது.உடனே குழந்தையை திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு

# வணிக வரித்துறையினர் சோதனையால் துறைமுகங்களுக்கு ஆடைகளை கொண்டு செல்வதில் தாமதம்: உற்பத்தியாளர்கள் புகார்

திருப்பூர், நவ.4

ஈரோடு கோட்டத்தின் கீழ் திருப்பூர் வணிகவரி மாவட்டம் இயங்கி வந்தது. வணிக வரி அமலாக்க பிரிவு அதிகாரிகள், ஈரோட்டிலிருந்து திருப்பூருக்கு வந்து வாகன சோதனைகள் நடத்தி வந்தனர். திருப்பூர் வணிக வரி கோட்டம் உருவாக்கப்பட்டு கடந்த ஜூலை மாதம் முதல் செயல்பாட்டை துவக்கியுள்ளது. அவிநாசி அருகே கைகாட்டிப்புதூரில் அமலாக்கப்பிரிவுடன் கூடிய வணிக வரி இணை கமிஷனர் அலுவலகம் செயல்படுகிறது. வரி ஏய்ப்புகளை கண்டறிந்து பிடிக்க 8 பறக்கும்படை ரோந்து வாகனங்கள் களத்தில் உள்ளன. இதையடுத்து, கடந்த3 மாதங்களாக திருப்பூரில் வணிக வரித்துறையின் பறக்கும் படை பிரிவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.




வாகனங்களில் எடுத்துச் செல்லப்படும் சரக்குகளுக்கு உரிய இவே பில், இ இன்வாய்ஸ் உள்ளதா, சரக்குகளின் தொகை விவரங்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா, வரி ஏய்ப்பு நடைபெற்றுள்ளதா என ஆய்வு நடத்துகின்றனர்.

தீபாவளி நெருங்கும் நிலையில் உற்பத்தி செய்த பின்னலாடைகளை, வெளிமாநிலங்கள், வெளி நாடுகளுக்கு விரைந்து அனுப்புவதில் திருப்பூர் நிறுவனங்கள் முனைப்பு காட்டி வருகின்றன. பின்னலாடை ஏற்றிச்செல்லும் வாகனங்களை வணிக வரி பறக்கும்படையினர் ஆங்காங்கே மடக்கி சோதனை செய்கின்றனர். வரி ஏய்ப்பு கண்டறியப்பட்டால் அபராதங்கள் விதிக்கின்றனர்.

இது குறித்து ஆடிட்டர் தனஞ்செயன் கூறியதாவது: திருப்பூர் வணிக வரி கோட்டம் உருவானதையடுத்து அமலாக்க பிரிவினர் தினந்தோறும் வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர் சோதனைகளால் வரி ஏய்ப்பு பெருமளவு கண்டறிந்து தடுக்கப்படும். இது வரவேற்கத்தக்கது.

இஇன்வாய்ஸ், இவே பில் உருவாக்கப்பட்டு விட்டது என்றாலே வரி ஏய்ப்புநடைபெறவாய்ப்பு இல்லை. வாகன சோதனையில் ஈடுபடும் அமலாக்க பிரிவு பறக்கும்படையினரோ, உரிய ஆவணங்கள் இருந்தாலும், அவற்றில் சிறு சிறு பிழைகள் இருந்தாலும் கூட (கிளெரிக்கல் மிஸ்டேக்), 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் என அபரிமிதமான வரி விதிக்கின்றனர்.

அதிகாரிகளின் இந்த அதிரடி நடவடிக்கை பின்னலாடை துறையினரை பாதிக்க செய்கிறது. சாதாரண பிழைக்கு கூட பெருந்தொகையை அபராதமாக செலுத்த நேரிடுவதோடு குறித்த நேரத்தில் ஆடைகளை, துறைமுகங்களுக்கு கொண்டு சேர்ப்பதில் கால தாமதமும் ஏற்படுகிறது. முறையான ஆவணங்கள் இருந்து, வரி ஏய்ப்பு நோக்கமில்லை எனதெரிந்தால், சிறுபிழைகளுக்கு, குறைந்தபட்ச அபராதம் மட்டும் வசூலித்துவிட்டு வாகனங்களை விடுவித்து விட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, வணிகவரி அமலாக்கப்பிரிவு உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், இவே பில், இஇன் வாய்ஸ் இருந்து, சிறு சிறு பிழைகள் இருப்பின் அவற்றை பெரிதுபடுத்த வேண்டாம் என பறக்கும் படையினருக்கு அறிவுறுத்தப்படும் என்றார்.

# மங்கலம் பகுதி விசைத்தறி தொழிலாளர்களுக்கு 13.16 சதவீதம் தீபாவளி போனஸ்

மங்கலம், நவ. 4

2022,2023ம் ஆண்டு மங்கலம்பகுதிவிசைத்தறி தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்குவது சம்மந்தமான பேச்சுவார்த்தையானது மங்கலம் ஊராட்சி சுல்தான்பேட்டை பகுதியில் உள்ள அம்மன் கலையரங்க வளாகத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு போனஸ் பேச்சுவார்த்தையானது மங்கலம் பகுதி கூலிக்கு நெசவுசெய்யும்விசைத்தறி சங்க நிர்வாகிகள் மற்றும் மங்கலம்பகுதிவிசைத்தறி தொழிற்சங்க நிர்வாகிகளிடையே போனஸ் பேச்சுவார்த்தை நடைபெற்றது



இந்த போனஸ் பேச்சுவார்த்தையின் இறுதியாக 2022,2023ம் ஆண்டு (இந்த ஆண்டு) மங்கலம்பகுதிவிசைத்தறி தொழிலாளர்களுக்கு 13.16 சதவீதம் தீபாவளி போனஸ் வழங்குவது என பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

இந்த பேச்சுவார்த்தை கூட்டத்தில் மங்கலம் பகுதி விசைத்தறி உரிமையாளர் சங்கம் தரப்பில் மங்கலம் பகுதி விசைத்தறிசங்கத்தலைவர் சுல்தான்பேட்டை ஆர். கோபால், மங்கலம் விசைத்தறி சங்க செயலாளர் பழனிச்சாமி, துணைச்செயலாளர் விஸ்வநாத் மற்றும் மங்கலம் பகுதி விசைத்தறி சங்க நிர்வாகிகளான வெங்கடாசலம், முத்துகுமார், மனோகர் ஆகியோரும் மங்கலம் பகுதி விசைத்தறி தொழிற்சங்கம் தரப்பில் விசைத்தறி சம்மேளன மாநில தலைவர் முத்துசாமி, விசைத்தறி தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் திருப்பூர் மாவட்ட செயலாளர் சிவசாமி, அண்ணா தொழிற்சங்க திருப்பூர் ஒன்றிய செயலாளர் எஸ். சுப்பிரமணி , ஐ.என்.டி.யு.சி.திருப்பூர் தெற்கு மாவட்ட பொதுச்செயலாளர் எம்.நடராஜ் ,சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்த வேலுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் உரிமைத்தொகை: பெண்களின் ஆவணங்களை முறைகேடாக பயன்படுத்தி பணமோசடி

திருப்பூர், நவ. 4

பின்னலாடை துறையில் வெளிநாட்டுக்கு ஆர்டரின் பேரில் பனியன்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டிற்கு தேவையான பனியன்களை உற்பத்தி செய்வதற்கென உள்நாட்டு ஆடை உற்பத்தி நிறுவனங்கள் திருப்பூரில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பனியன் பொருட்கள் மீது சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.,) கடந்த ஜூலை மாதம் 2017 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.



இதன்படி உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு 5, 12, 18 சதவீதம் என வரி விதிக்கப்பட்டது. இதன்படி பின்னலாடைக்கு 5 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. மேலும் உற்பத்தியாகும் பொருட்களின் மதிப்பு ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் இருந்தாலோ, 10 கிலோ மீட்டருக்கு மேல் சரக்குகளைஎடுத்துசென்றாலோ மின்னணு வழி ரசீது உருவாக்க ப்படவேண்டும் என 2018ம் ஆண்டு முதல் சட்டம் அமலுக்கு வந்தது.

இதையடுத்து வணிக வரித்துறையினர் தங்களது சோதனையை தீவிரப்படுத்தினர். இதனிடையே போலி ஜி.எஸ்.டி., பில்களை தயாரித்து கோடிக்கணக்கில் மோசடி செய்ததுதற்போது வெளிச்சத்திற்கு வந்து திருப்பூரை அதிர வைத்துள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் மகளிர் உரிமை தொகை பெற திருப்பூர் சாயப்பட்டறை வீதி பெத்தச்செட்டிபுரம் பகுதியில் உள்ள பெண்கள் சுமார் 80 க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

இதையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் விசாரித்தபோது ஒவ்வொருவர் பெயரிலும் பல கோடி ரூபாய் மதிப்பில் பணப்பரிமாற்றங்கள் நடைபெறும் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் செயல்படுவதாக தெரிய வந்தது.

இதையடுத்து தீவிரமாக விசாரித்ததில் மேற்படி சாயப்பட்டறை வீதியில் கடந்த பல மாதங்களுக்கு முன்னர் அரசின் நல உதவி திட்டங்களை பெற்றுத்தருவதாக கூறி பல்லடத்தை சேர்ந்த சிவக்குமார் மற்றும் கார்வேந்தன், விஜயகுமார், தமிழ்செல்வன் ஆகியோர் அடங்கிய கும்பல் மேற்படி பெண்களிடம் ஆதார் அட்டை, பான் அட்டை, வங்கி கணக்கு ஆகியவற்றை பெற்றது தெரியவந்துள்ளது. மேலும் அவர்கள் இந்த போலி ஜி.எஸ்.டி.யை உருவாக்கினார்களா என அப்பகுதி பெண்கள் சந்தேகிக்கின்றனர்.

நடராஜாதியேட்டர்அருகில் உள்ள நொய்யல் ஆற்றங்கரையில் குடியிருந்து வந்த ஏழை பெண்கள் நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றி அடுக்கு மாடி குடியிருப்புக்களுக்கு விண்ணப்பித்த போது தான் மேற்படி பிரச்சனை பூதாகாரமாக வெடித்துள்ளது.

மேலும் ஜிஎஸ்டி., கணக்கு துவங்க நிலையான முகவரியை எவ்வாறு வணிக வரித்துறையினர் ஆய்வு செய்தனர் என்பது கேள்விக்குறியாகியுள்ளது. மேலும் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு உரிமைத்தொகையை அரசு வழங்க சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது அப்பகுதி பெண்களின் கோரிக்கையாக உள்ளது.

இது குறித்து திருப்பூர் மாவட்ட ஜி.எஸ்.டி இணை இயக்குநர் முருககுமாரிடம் கேட்டபோது, திருப்பூரில், போலி ஜி.எஸ்.டி., மூலம் மோசடி நடந்துள்ளதாக புகார் பெறப்பட்டுள்ளது. எத்தனை பேர் பாதிக்கபட்டுள்ளார்கள் என்பது விசாரணை முடிவில் தான் தெரியவரும். விண்ணப்பதாரர்களின் சரிபார்ப்பு இல்லாமல் ஜிஎஸ்டி., சான்றிதழ்களை வழங்கியது குறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் ஜிஎஸ்டி., சான்றிதழ்களை ரத்து செய்வதற்கும் அல்லது மாற்றுவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

# சிவன்மலையில் இன்று 8 கி.மீ. தூர நடைப்பயிற்சி அமைச்சர்கள் பங்கேற்பு

முத்தூர்: நவ. 4

பொதுமக்களின் உடல் நலனைகருத்தில்கொண்டு அனைத்து மாவட்டங்களிலும், உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கி.மீ. தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான ஆரோக்கியமான பாதுகாப்பான நடைபாதை மாவட்டம்தோறும்தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழகம் முழுவதும் நாளை 4ந்தேதி (சனிக்கிழமை) காலை தொடங்கப்பட உள்ளது. மேலும் மாவட்டம்தோறும் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்த நடைபயிற்சியை முன்னிட்டு ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல் வாழ்வு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்படவுள்ளன.




திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம் அருகே சிவன்மலை ஊராட்சியில் சிவன்மலை முருகன் கோவில் கிரிவலப் பாதையில் இந்த 8 கி.மீ. தூர நடைபயிற்சி மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சிவன்மலை கிரிவலப்பாதையில் இரண்டு முறை சுற்றி வந்தால், 8கி.மீ.தூரம் நிறைவு பெறும்.

இதனை முன்னிட்டு சிவன்மலை கிரிவலப்பாதை சுத்தப்படுத்தும் பணி மற்றும் சாலை ஓரத்தில் உள்ள குப்பைகளை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. சிவன்மலை கிரிவலப் பாதையில் ஆங்காங்கேமருத்துவ முகாம்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த நடைபயிற்சியில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நடைபயிற்சியில் திருப்பூர் மாவட்டப் பகுதியை சேர்ந்த 2 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நடைப்பயிற்சி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருப்பூர் மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சோளம் சாகுபடி பரப்பு குறைந்ததால் மாடுகளுக்கான தீவனப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு



திருப்பூர், நவ.4

திருப்பூர் மாவட்டத்தின் பல இடங்களில் கால் நடை வளர்ப்பில் பெரும் பாலான விவசாயிகள் ஈடு படுகின்றனர். இச்சமயத்தில்கால்நடைக ளுக்கு தீவனமாக பயன்ப டும் சோளம் விதைப்பில் ஈடுபடுவர்.

அதற்கேற்றாற் போல் பருவமழையும் பெய்யும். ஆனால் இம்முறை பருவ மழை பொய்த்ததால், சோளம் சாகுபடியில், விவசாயிகள் ஆர்வம் காட் டவில்லை. மாவட்டத் தில் கணிசமான அளவில் சோளம் சாகுபடி குறைந்தி ருக்கிறது என கூறப்ப டுகி றது. விவசாயிகள் கூறுகை யில், சோளம் சாகுபடி பரப்பு குறைந்ததால் மாடு களுக்கான தீவ னப்ப ற்றாக்குறை ஏற்படும். இதற்கு பயந்து பலரும் தங்களி டம் உள்ள கறவை மாடு களை விற்க துவங்கி யுள்ள னர். இதுபோன்ற வறட்சி சமயங்களில், விவசாய நிலங்களில் மேற்கொள்ள வேண்டி பயிர் சாகுபடி முறை, நீர் மேலாண்மை, பண்ணைக்குட்டை அமைப்பது போன்ற விஷ யங்கள் தொடர்பான பயிற்சி, விளக்கம் அளிக்க வேண்டும் என்றனர்.

# கொங்கு மண்டல தொழில் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று கோவையில் இருந்து மும்பைக்கு மேலும் ஒரு விமான சேவை டிசம்பர் மாதம் முதல் இயக்கம்



திருப்பூர், நவ.4

திருப்பூர், கோவை உள் ளிட்ட கொங்கு மண்டல தொழில் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று மும் பைக்கு மற்றொரு விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் தொடங்க உள் ளது. வருகிற டிசம்பர் மாதம் 15ந்தேதியில் இருந்து இந்த விமானம் வாரம் 7 நாட்களும் இயக் கப்படவுள்ளது. தினமும் இரவு 9:35 மணிக்கு கோவையில் புறப்படும் இந்த விமானம் 11:20 மணிக்கு மும்பையை சென்றடையும்.

மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலை யத்தின்பன்னாட்டு முனை யத்துக்கே (டி 2) இந்த விமானம் செல்வதால் அங்கிருந்து வேறு விமா னம் மாறி வெளிநாடுக ளுக்கு செல்ல முடியும்.

கோவையில் இருந்து ஒரே டிக்கெட்டாக பதிவு செய் தால், சீம்லெஸ் கனெக்ட்டி விட்டி என்ற முறையில் பொருட்களை விமானத்துக்கு மாற்ற வேண் டிய அவசிய மில்லை. மும்பை டி 2வில் இமிக்ரேசன் மற்றும் கஸ்டம்ஸ் சோதனைக ளுக்கு பின் விமானம் மாறிச் செல்லலாம்.

இதனால் கோவையில் இருந்து அமெரிக்காவின் நியூயார்க் நகரத்திற்கு 19 மணி நேரம் 50 நிமிடங்களில் சென்று விட முடியும். அமெரிக்க நகரங்களுக்கு மட்டு மின்றி, லண்டன், முனிச், பாரிஸ், மொரிஷியஸ், ஆம்ஸ்டர்டாம், ரியாத், ஜெட்டா, எகிப்து, தோஹா, துபாய், அபு தாபி, மஸ்கட் உள்ளிட்ட 20 வெளிநாட்டு நகரங்க ளுக்கு இந்த ஏர் இந்தியா விமான சேவை இணைப் பாக அமையும். மும் பைக்கு 3 இண்டிகோ, ஏர் இந்தியா மற்றும் விஸ் தாரா விமானங்கள் இயக் கப்படும் நிலை யில் இது 6வது விமானசேவையா கும்.

கோவையிலி ருந்து மும்பைக்கு காலை 6:45 மணிக்கு, இண் டிகோ விமானம் முதல் சேவையை தொடங்குகிறது. அதையடுத்து ஏர் இந்தியாகாலை 9 மணி, விஸ்தாராமதியம் 2:30 மணி, இண்டிகோ மாலை 4:45 மணி, ஏர் இந் தியாஇரவு 9:35 (டிசம்பர் 15ந்தேதியில் இருந்து ), இண்டிகோஇரவு 10:20 மணி என மொத்தம் 6 விமானங்கள் கோவை யில் இருந்து மும்பைக்கு இயக்கப்படுகின்றன.

# சிவன்மலை ஊராட்சியில் ரூ.3 கோடி மதிப்பில் சிறு விளையாட்டரங்கம் கட்டும் பணிகள்



திருப்பூர்: நவ.4

திருப்பூர் மாவட்டத்தில் 202324ல் 10 ஒன்றியங்க ளில் 191 கி.மீ., நீளத்துக்கு 107.53 கோடி ரூபாய் மதிப்பிலான 44 ரோடு பணிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளன. அதில் திருப் பூர், மூலனூர், பல்லடம் ஒன்றியங்கள் விடுபட்டுள்ளன.

அதன்படி அவிநாசி ஒன் றியத்தில்(15கி.மீ., ரோடு) 10.56 கோடி ரூபாய், குடி மங்கலத்தில் (9.76 கி.மீ.,) ரூ.5கோடி, தாராபுரத்தில் (56 கி.மீ.,) ரூ.33.11 கோடி, காங்கயத்தில் (21.39 கி.மீ.,) ரூ.11.99 கோடி, குண்டடம் (20 கி.மீ.,) ரூ. 11.84 கோடி, மடத்துக்குளம் (4.05 கி. மீ.,) ரூ. 1.81 கோடி.

பொங்கலூர் (7.36 கி.மீ.,) ரூ.3.13 கோடி, வெள்ளகோவில் (8.33 கி.மீ.,) ரூ.4.01 கோடி, ஊத்துக்குளி (13.84 கி. மீ.,) ரூ. 9.65 கோடி, உடு மலை (31.18 கி.மீ.,) ரூ.16.99 கோடி வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. தாராபுரம் ஒன்றியத் தில் புதிய பாலம் அமைக்க 1.97 கோடி ரூபாய் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித்துறை பணிகள் தேர்வில் பாரபட் சம் காட்டுகின்றனர். மத் திய, மாநில அரசு திட்டப் பணிகளை, அனைத்து ஒன்றியங்களுக்கும், பார பட்சமின்றி பகிர்ந்து வழங்க வேண்டும். விரை ந்து பணிகளை முடிக்க மாவட்ட நிர்வாகம் முன் வர வேண்டும் என்கின்ற னர் பொதுமக்கள்.

இது குறித்து, ஊரக வளர்ச்சி முகமை அதிகாரி களிடம் கேட்டபோது, விடுபட்ட ஒன்றியங்க ளுக்கு மற்றொரு திட்டங்க ளில் ரோடு பணி ஒதுக்கப் படும். பணிகள் சுழற்சி முறையில் அனைத்து ஒன் றியங்களுக்கும் ஒதுக்கப்ப டுகிறது என்றனர்.

# அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பொது பயன்பாட்டு மின் கட்டணம் குறைப்பு



உடுமலை, நவ.4

நடப்பாண்டுக்கான முதல் மற்றும் இரண்டா மாண்டு ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான தொடக்கக்கல்வி பட்ட யத்தேர்வு ஜூன், ஜூலை மாதங்களில் நடந்தது. தேர்வு முடிவுகள் செப்டம் பர் மாதம் வெளியிடப் பட்டது.

விடைத்தாள்களின் ஒளி நகல்களை பெறுவது, மறு கூட்டல் மற்றும் மறுமதிப் பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் www.dge.tn.gov.in என்ற இணையத ளத்தில் விண்ணப்பங்களை பதிவி றக்கம் செய்து கொள்ள லாம்.

பூர்த்தி செய்த விண்ணப் பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் நேரடியாகச்சென்று ஆன் லைனில் விண்ணப்பிக்க வேண்டும். தபால் வழி யாக பெறப்படும் விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மறுகூட்டல் விண்ணப்பிக்க தலா ஒரு பாடத்துக்கு 205 ரூபாயும், மறுமதிப்பீட்டுக்கு தலா ஒரு பாடத்துக்கு 505 ரூபா யும் கட்டணமாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது. தேர் வர்கள் அவரவர் பகுதிக்கு அருகிலுள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவ னத்தில் நேரடியாகச் சென்று உரிய கட்ட ணத்தை செலுத்தி விண்ணப்பிக்கலாம். மறு கூட்டல் மற்றும் மறுமதிப் பீட்டுக்கு இன்று இறுதி நாளாக உள்ளது. இத்தக வலை திருமூர்த்திநகர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் சங்கர் தெரிவித்தார்.

# தொடக்க கல்வி பட்டயத்தேர்வு விடைத்தாள்கள் மறுகூட்டல் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், நவ.4

காங்கயம் கோட்ட அள விலான மின்நுகர்வோர் குறை தீர்க்கும் கூட்டம் காங்கயம் கோட்ட மின் சார வாரிய அலுவலகத் தில்நடந்தது. கூட்டத்திற்கு பல்லடம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் ஜவஹர் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மின்வாரிய பொது ஒப்பந்த தொ.மு.ச. மாநில செயலாளர் இணை பொதுச் செயலாளர் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன் கொடுத்த மனுவில் கூறப் பட்டு இருப்பதாவது:

அரசின் விதிகளின் படி அரசாங்க கடிதங்கள் அரசு துறை நிறுவனமான இந் திய தபால் துறை மூலமாக தான் அனுப்ப வேண்டும். ஆனால் திருப்பூர் மின்சார வாரிய அலுவலகத்திற் குட்பட்ட பகுதியிலுள்ள அதிகாரிகள் தனியார் கூரி யர் நிறுவனம் மூலமாக அனுப்பி வருவது சட்டவி ரோத செயலாகும். சமூக ஆர்வலர்கள்,

பொது மக்கள் கொடுக் கும் மனுக்கள் மீது 30 நாட் களில் உரிய தீர்வுகாண வேண்டும். புகார் மனுக் களை கிடப்பில் போட்டு தவறு செய்தவர்களுக்கு சாதகமாக இருப்பது சட்ட விரோதமான செயலா கும். தவறு செய்தவர்கள் மீது சட்டரீதியாக உரிய நட வடிக்கை எடுக்க வேண் டும். குறைத்தீர்க்கும் கூட் டத்தில் அளிக்கும் மனுக்கள் மீது உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனு வில் கூறப்பட்டுள்ளது. இதில் சமூக ஆர்வலர்கள் கே.ஏ.கே.கிருஷ்ணசாமி, ஆண்டிபாளையம் ரவி, கூலிபாளையம் ஈஸ்வரன் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# கோவை–ஜபல்பூர் வாராந்திர சிறப்பு ரெயில்கள் நீட்டிப்பு



திருப்பூர், நவ.4

கோவை, ஜபல்பூர் வாராந்திர சிறப்பு ரெயில் கள் நீட்டிப்பு செய்யப்பட் டுள்ளன.

பாலக்காடு, சொரனூர், மங்களூரு வழியாக கோவை ஜபல்பூர் இடையே வாராந்திர சிறப்பு ரெயில்கள் இயக் கப்படுகின்றன.

இந்த வாராந்திர சிறப்பு ரெயில்களின் சேவை காலம் நீட்டிக்க ப்பட்டுள் ளது. ரெயில் எண் (02198) ஜபல்பூர் கோவை இடையே, வாராந்திர சிறப்பு ரெயில் 3ந்தேதி முதல் 29ந்தேதி வரை சனிக்கிழமை அன்று ஜபல் பூரில் இருந்து 11.50 மணிக்கு புறப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை 2.40 மணிக்கு கோவை வரும். ரெயில் எண் (02197) கோவை ஜபல்பூர் வாராந் திரசிறப்பு ரெயில் கோவை யில் இருந்து 6ந்தேதி முதல் ஜனவரி 1ந்தேதி வரை திங்கட்கிழமை கோவையிலிருந்து 5.05 மணிக்கு புறப்பட்டு, புதன்கிழமை 8:45 மணி க்கு ஜபல்பூரை சென்றடை யும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# கல்வி உதவித்தொகை பெற தகுதியான மாணவர்களின் விபரங்களை இணையதளத்தில் பதிவேற்ற உத்தரவு

திருப்பூர், நவ. 4

கோவையில் இருந்து பெங்களூருக்கு உதய் எக்ஸ்பிரஸ் (எண்:22666) தினமும் காலை 5:40 மணிக்கு இயக்கப்படுகி றது. மற்ற வகையில் கோவையில் இருந்து பெங்களூருவுக்கு நேரடி ரெயில் இல்லை. தினசரி ரெயில்களாக உள்ள கன் னியாகுமரி பெங்களூரு (எண்:16525), கண்ணூர் யஷ்வந்த்பூர் (எண்:16528), கொச்சு வேலி மைசூரு (எண்:16316), எர்ணாகு ளம் பெங்களூரு (எண்:12678) எக்ஸ்பிரஸ் களில் பயணிகள் கோவை, திருப்பூரில் இருந்து பய ணிக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட ரெயில்கள் கேரளாவில் இருந்து புறப் பட்டு, பலநிலையங்களை கடந்து வருவதால், கோவை, திருப்பூருக்கான இருக்கைகள் ஒதுக்கீடு குறைவாக உள்ளது. முன் பதிவு இருக்கை, படுக்கை வசதி மேற்கு மண்டல பய ணிகளுக்கு கிடைப்பதில்லை. எப் போது முன் பதிவு செய்தா லும் பட்டியலில் காத்தி ருக்க வேண்டிய நிலை உள்ளது.

இது குறித்து ரெயில் பய ணிகள் சிலர் கூறியதாவது:

பெங்களூருவில் நிறைய தொழில் வாய்ப்புகள் உள் ளதால், மேற்கு மண்டலத் தில் இருந்து அங்கு சென்று, பலரும் பணிபுரி கின்றனர். கோவை பெங் களூரு இடையே பகல் அல்லது இரவில் நேரடி ரெயில் இயக்கினால், பய னுள்ளதாக இருக்கும். முன்பதிவு செய்வோருக் கும் இருக்கை உறுதியா கும்.

சேலம் கடந்து பெங்க ளூரு செல்லும் ரெயில்க ளில், கோவையில் இருந்து கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், ஓசூர் பகு திக்கு பயணிப்பவர்கள் ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். எனவே அதிக ரிக்கும் டிக்கெட் முன்ப திவை கருத்தில் கொண்டு தீபாவளிக்கு முன்னதாக பரீட்சார்த்த முறையில் கோவை பெங்களூரு இடையே ரெயில் இயக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பெங்களூருக்கு கூடுதல் ரெயில் இயக்க வேண்டும்: திருப்பூர் பயணிகள் எதிர்பார்ப்பு



திருப்பூர், நவ.4

தமிழகத்தில் அடுக்கு மாடி குடியிருப்புகள், ஒரே வளாகத்தில் அமைந் துள்ள ஒன்றுக்கு மேற் பட்ட வீடுகள் உள்ள கட்ட டங்களுக்கான பொது பயன்பாட்டு மின் இணைப்பு யூனிட்டுக்கு 8.15 ரூபாய் கட்டணம் விதிக்கப்பட்டது. இதுத விர கிலோவாட்டுக்கு 204 ரூபாய் நிலை கட்டண மும் விதிக்கப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த குடியிருப்போர் நல அமைப்புகள், மின் கட்டணத்தை குறைக்க கோரிக்கை விடுத்தனர். இதனையேற்று அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கான பொது பயன்பாட்டு மின் கட்டணம் குறைக்கப்படுமென 18 ந்தேதி முதல்வர் அறிவித் தார். அதற்கான உத்தரவை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட் டுள்ளது.

10 வீடுகள் அல்லது அதற்கு குறைவான வீடு கள் உள்ள வளாகம் மற் றும் அடுக்குமாடி குடியி ருப்பு, லிப்ட் வசதியில்லாத குடியிருப்புகளுக்கு பொது பயன்பாட்டுக்கான மின் கட்டணம் 8.15 ரூபாய் என்பது 5.50 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

பொது பயன்பாட்டுக் கான மின் கட்டண குறைப்பு சலுகையை பெற தாழ்வழுத்த மின் இணைப்பையும், டேரீப் மாற்றி கொள்ளலாம். பொது பயன்பாட்டு மின் இணைப்பு, 1டி என்ற வகையில் இருந்தது. இதில் யூனிட்டுக்கு 5.50 ரூபாய் மின் கட்டணம் செலுத்ததகுதியானபொது பயன்பாட்டு இணைப்பு களை 1இ என, வகை மாற் றம் செய்து கொள்ள வேண் டும் எனவும் மின்வாரியம் அறிவித்துள்ளது.

இது குறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறுகையில், குடியிருப்பு வளாகம் மற் றும் அடுக்குமாடி குடியி ருப்புகளுக்கு 1இ என்ற தாழ்வழுத்த மின் இணைப்பு வகை அறிமு கம் செய்யப்பட்டுள்ளது. லிப்ட் வசதியில்லாத 3 மாடிக்கும் குறைவாக உள்ள வீடுகள் 10 வீட்டுக் கும் குறைவாக உள்ள வளாகங்கள் இந்த இணைப்பு பெறலாம்.

அரசு உத்தரவுப்படி மின் வாரியம் 1இ இணைப்பை அறிமுகம் செய்துள்ளது. தகுதியானவர்கள் 1டி இணைப்பை 1இ என்று வகை மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்வது குறித்து விரைவில் அறி விப்பு செய்யப்படும் என்ற னர். குடியிருப்புகளு க்கான பொது பயன்பாட்டு மின் இணைப்புக்கு நிலை கட்டணமாக கிலோவாட் டுக்கு 204 ரூபாய் கட்ட ணம் வசூலிக்கப் படுகி றது. பயன்படு த்தும் மின்அளவை காட்டி லும் நிலை கட்டணம் தான் பெரும் சுமையாக வருகிறது. வாடகை வீடுக ளில் வசிப்பவருக்கு கூடு தல் சுமையாக இருக்கி றது. எனவே வீடுகளுக்கான பொது பயன்பாட்டு மின் இணைப்புக்கு நிலை கட் டணம் நிர்ணயம் செய்துள் ளதை ரத்து செய்ய வேண் டும் என மின்நுகர்வோர் எதிர்பார்த்து ள்ளனர்.

# பிரதமர் கிராம சாலை திட்டத்தில் உடுமலை ஒன்றியத்தில் 31.18 கி.மீ., சாலை அமைக்க ரூ.16.99 கோடி நிதி ஒதுக்கீடு



காங்கயம், நவ.4

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம், சிவன்மலை ஊராட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையம் சார் பில் ரூ.3கோடி மதிப்பீட் டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் கட்டப்பட உள்ளது. இதற் காக சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயி லாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். சிவன்மலையில் நடை பெற்ற நிகழ்ச்சியில் கலெக்டர் கிறிஸ்துராஜ் கலந்து கொண்டார்.

அப்போது அவர் கூறிய தாவது:

தமிழ்நாடுவிளையாட்டு மேம்பாட்டு ஆணையத் தின் சார்பாக தமிழ்நாட் டில் 10 இடங்களில் முதல மைச்சரின் சிறு விளையாட்டு அரங்கங் கள் அமைக்கப்படவுள் ளது. அதில் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சட்டமன்ற த்தொகுதியில் சிவன்மலை கிராமத்தில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் 6.56 ஏக்கர் நிலப்பரப்பில் முதலமைச்சர் சிறு விளை யாட்டு அரங்கம் அமைக் கப்படவுள்ளது.

இந்த விளையாட்டு அரங்கத்தில் 400 மீ ஓடுதள பாதை, கால்பந்து, கையுந்து பந்து, கூடைப் பந்து, கபாடி ஆகிய விளை யாட்டுகளுக்கு மைதானம் மற்றும் பார்வையாளர்கள் அமரும் கேலரி, அலுவ லக அறை, பொருள் பாது காப்பு அறை, விளை யாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உடை மாற்றும் அறை, கழிவறை வசதிகளுடன் சிறு விளை யாட்டு அரங்கம் அமைக் கப்படவுள்ளது.

காங்கேயம் சட்டமன்ற தொகுதியில் சிறு விளை யாட்டு அரங்கம் அமைக் கப்பட உள்ளதால் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத் திக்கொள்ளுமாறு கேட்டு க்கொள்கிறேன். இவ் வாறு கலெக்டர் தெரிவித் தார்.

இந்நிகழ்ச்சியில் திருப் பூர் மாநகராட்சி 4ம் மண்ட லக்குழுத்தலைவர் இல.பத்மநாபன், காங்கே யம் ஊராட்சி ஒன்றியக்கு ழுத்தலைவர் மகேஷ்கு மார், துணைத்தலைவர் ஜீவிதா ஜவ கர், காங்கயம் தெற்கு ஒன் றிய தி.மு.க. செயலாளர் சிவானந்தன், நகர செயலா ளர் வசந்தம் சேமலையப் பன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளை ஞர் நலன்அ லுவலர் ராஜ கோபால், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலு வலர்கள் ஹரிகரன், விம லாதேவி, சிவன்மலை ஊராட்சி மன்றத்தலைவர் துரைசாமி, துணை தலை வர் சண்முகம், காங்கயம் தெற்கு ஒன்றிய தி.மு.க. துணை செயலாளர் பால சுப்பிரமணியன், திருப்பூர் மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் மகேஷ்குமார், சிவன் மலை தி.மு.க. கிளை செயலாளர் சிவகுமார் உள் பட உள்ளாட்சிஅமைப்பு களின் பிரதிநிதிகள் மற் றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 04.11.2023



# எது மாறுனாலும் இந்த Vibe மாறாது.. தொடர்ந்து ஹிட் அடிக்கும் காவாலா



கோலமாவு கோகிலா, டாக்டர், பீஸ்ட் படங்களை இயக்கியநெல்சன்திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடித்த திரைப்படம் 'ஜெயிலர்'. இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படம் ஆகஸ்ட் 10ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று ரூ.500 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. அதுமட்டுமல்லாமல் இப்படத்தில் இடம்பெற்றிருந்த பாடல்கள் அனைத்தும் ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து ஹிட்டடித்துள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' படத்தில் இடம்பெற்றுள்ள 'காவாலா' பாடல் 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது. இதனை படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

# மெட்ராஸில் வளர்ந்த பசங்க யாருக்குமே சாதி தெரியாது கார்த்தி ஆவேசம்

இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்பறிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்களில் நடித்த அனு இமானுவேல் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்க ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இதையடுத்து இப்படத்தின் புரொமோஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சியில்கலந்துகொண்டநடிகர்'மெட்ராஸ்'படம்குறித்தகேள்விக்குபதிலளித்தார். அவர் பேசியதாவது, மெட்ராஸில் வளர்ந்த பசங்க யாருக்குமே சாதி தெரியாது. நமக்கு பேர் மட்டும் தான் தெரியும். அதை தாண்டி எதுவுமே பார்த்தது கிடையாது. அந்த கதையில் எனக்கு பிடித்திருந்தது சுவர் தான். உலக சினிமா மாதிரி ஒரு சுவரை சுற்றி ஒரு அரசியல் மட்டும் தான் என் கண்ணில் பட்டது. அதில் இருக்கிற கதாபாத்திரங்கள் மட்டும் தான் என் கண்ணில் பட்டது. அதை சாதி படமாக இப்போது வரை பார்த்ததில்லை.

மேலும், "நான் சாதி பார்ப்பதில்லை. அது அவரவர் பார்வையில் இருக்கிறது. இப்போது ஸ்கூலில் எதுக்கு ஒரே மாதிரி சீருடை கொடுக்கிறாங்க. வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதற்காகதான். நான் அப்படி வளர்க்கப்பட்டவன். எனக்கு அந்த வித்தியாசம் தெரியாது" என்றார்.


# ரவுடிசத்துக்கு ஒரு பிராண்ட் கிரியேட் பண்ணப்போறேன் கவனம் ஈர்க்கும் ரெய்டு டிரைலர்



'டாணாக்காரன்'மற்றும்சமீபத்தில்வெளியான 'இறுகப்பற்று' போன்ற படங்களில் தனது அற்புதமான நடிப்பின் மூலம் ரசிகர்களின் இதயங்களை வென்றவர் விக்ரம் பிரபு. இவர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'ரெய்டு'. ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகியுள்ள 'ரெய்டு' திரைப்படத்தை கார்த்தி இயக்கியுள்ளார். இந்த படத்தில் ஸ்ரீதிவ்யா கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும், அனந்திகா, ரிஷி ரித்விக், சவுந்தரராஜா மற்றும் பலர்முக்கியகதாபாத்திரங்களில்நடித்துள்ளனர். எஸ்.கே. கனிஷ்க் மற்றும் ஜிகே ஆகியோர் தயாரித்துள்ள இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைத்துள்ளார். இப்படத்திற்கு இயக்குனர்முத்தையாவசனம்எழுதகதிரவன்ஒளிப்பதிவு செய்துள்ளார்.

'ரெய்டு' திரைப்படம் 10ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. 'ரவுடிசத்துக்கு ஒரு பிராண்ட் கிரியேட் பண்ணப்போறேன்' போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த டிரைலர் ரசிகர்களின் கவனம் ஈர்த்து வருகிறது.

# அவர் ஆசிர்வாதம் இருந்தால் தேர்தலில் போட்டியிடுவேன்.. கங்கனா ரனாவத்




பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகை கங்கனா ரனாவத். இவர் ஜெயம் ரவி நடித்த தாம் தூம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். இதன்பிறகு, தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை தழுவி உருவாக்கப்பட்ட தலைவி படத்தில் நடித்திருந்தார்.

இவர், இயக்குனர் பி. வாசு இயக்கிய சந்திரமுகி 2 படத்தில் நடித்திருந்தார். இதன்பிறகு, இந்தியில் உருவான தேஜஸ் படத்தில் நடித்துள்ளார். சமீபத்தில் துவாரகா கோவிலுக்கு சென்றிருந்தார். கோயிலில் சாமி தரிசனம் செய்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த கங்கனா அவர்களின் கேள்விக்கு பதில் அளித்தார்.

அதன்படி, பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு பதில் அளித்தகங்கனாரனாவத்,"கடவுள்கிருஷ்ணர்ஆசிர்வதித்தால்,நான்போட்டியிடுவேன். பா.ஜ.க.அரசின்முற்சிகளால்,இந்தியர்களாகியநாம்600ஆண்டுகாலபோராட்டத்தின் வெற்றியை பார்க்க போகிறோம். உலகம் முழுக்க சனாதன தர்மத்தின் கொடியை பறக்க செய்ய வேண்டும்," என்று தெரிவித்தார்.

# எங்கு தப்பு நடந்தாலும் கண்டிப்பா வருவேன்.. இந்தியன் is Back



இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்துள்ளார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா,காஜல்அகர்வால்,சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது. இதையடுத்து 'இந்தியன் 2' படத்தின் அறிமுக வீடியோவை இன்று மாலை 5.30 மணிக்கு தமிழில் ரஜினி, தெலுங்கில் இயக்குனர் ராஜமவுலி, இந்தியில் நடிகர் அமீர்கான், கன்னடத்தில் கிச்சா சுதீப், மலையாளத்தில் மோகன் லால் வெளியிடவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், இப்படத்தின் அறிமுக வீடியோ வெளியாகியுள்ளது. 'எங்கு தப்பு நடந்தாலும் கண்டிப்பா நான் வருவேன்' போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த வீடியோவை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் வைரலாக்கி வருகின்றனர்.



# நடிகை பூஜா பட் நில விவகாரம் ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகாவில், குப்பன் என்பவருக்கு 1978ம் ஆண்டு ஆகஸ்டு 9ந்தேதி ஒரு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியது. அப்போது, 10 ஆண்டுகளுக்கு இந்த நிலத்தை விற்பனை செய்யக்கூடாது என்று நிபந்தனை விதித்தது. இதன்படி, இந்த நிலத்தை 1988ம் ஆண்டு அக்டோபர் 3ந் தேதி பவர் ஏஜெண்ட் மூலம் குப்பன் விற்பனை செய்தார். அதன்பின்னர், அந்த நிலத்தை பகுதி பகுதியாக பலர் வாங்கியுள்ளனர். அதில், 27 சென்ட் நிலத்தை அரவிந்த தேவி என்பவர் 1999ம் ஆண்டு விலைக்கு வாங்கினார். அதில், 13.84 சென்ட் நிலத்தை தன் மகள் பிங்கிள் ரமேஷ் ரெட்டிக்கு எழுதி கொடுத்தார். இதற்கிடையில், குப்பன் கொடுத்த கோரிக்கை மனுவை ஏற்று, இந்த நிலத்துக்குரிய பட்டாவை ரத்து செய்து கோத்தகிரி தாசில்தார் கடந்த 2016 ம் ஆண்டு மார்ச் 21ந் தேதி உத்தர விட்டார். இந்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் பிங்கிள் ரமேஷ் ரெட்டி வழக்கு தொடர்ந்தார். இந்த ஒரு ஏக்கரில் மற்றொரு பகுதியை வாங்கிய நடிகை பூஜாபட், ருக்மணி குமாரமங்கலம் ஆகியோரும் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, இந்த நிலம் மட்டுமல்லாமல், நீலகிரி மாவட்டத்தில் தனியாருக்கு நிபந்தனைகளுடன் வழங்கப் பட்ட அரசு நிலங்கள் அனைத்தையும் மாவட்ட கலெக்டர் மறுஆய்வு செய்ய வேண்டும். அதில் ஏதாவது விதிமீறல் இருந்தால், அந்த நிலத்தை பொது பயன்பாட்டுக்காக மீண்டும் கையகப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கையை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும்'' என்று உத்தர விட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், பிங்கிள் ரமேஷ் ரெட்டி, நடிகை பூஜா பட், ருக்மணி குமாரமங்கலம் ஆகியோர் தனித்தனியாக மேல் முறையீடு செய்திருந்தனர். இந்த வழக்குகள் எல்லாம் தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா, நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, பிங்கிள் ரமேஷ் ரெட்டி தரப்பில் மூத்த வக்கீல் அப்துல் சலீம் ஆஜராகி, நிலத்தின் ஒதுக்கீட்டை 45 ஆண்டுகளுக்கு பின்னர் ரத்து செய்துள்ளனர். இதன்மூலம், மனுதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமை பறிக்கப்பட்டுள்ளது'' என்று வாதிட்டார். அரசு தரப்பில் ஆஜரான அரசு பிளீடர் பா.முத்து குமார், ''நடிகை பூஜாபட் பெயரில் உள்ள நிலம் மட்டுமே இதுவரை அரசு எடுத்துள்ளது'' என்றார். இதை பூஜாபட் தரப்பில் ஆஜரான வக்கீல் மறுப்பு தெரிவித்து வாதிட்டார். அனைத்துதரப்புவாதங்களையும்கேட்டறிந்தநீதிபதிகள்,''இந்தவழக்கைவருகிறடிசம்பர்8ந்தேதிதள்ளிவைக்கிறோம். அதுவரை அனைத்து தரப்பினரும் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டனர்.

# ரஜினிக்கு வில்லனாகும் விஜய் பட கலைஞர்.. யார் தெரியுமா?



இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் ரஜினி புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இப்படத்திற்கு தற்காலிகமாக 'தலைவர் 170' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். திரைப்பிரபலங்கள் பலர் இணைந்துள்ள இப்படத்தின் மும்பை படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவுற்றது.

இதைத்தொடர்ந்துரஜினியின்171வதுபடத்தைஇயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். இப்படத்தின் அறிவிப்பு சமீபத்தில் வெளியாகி எதிர்பார்ப்பை எகிற வைத்துள்ளது.

இந்நிலையில், ரஜினியின் 171வது படம் குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்தில் வில்லனாக நடிகர் ராகவா லாரன்ஸ் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. ராகவா லாரன்ஸ், ரஜியின் மிகப்பெரிய ரசிகர் என்பதால் எப்படி வில்லனாக நடிப்பார் என்ற கேள்வியும் வலம் வருகிறது.

விஜய்யின் சில படங்களில் ராகவா லாரன்ஸ் நடன இயக்குனராகபணியாற்றியுள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது.

# ரகமத் ஷா அதிரடி... 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் நெதர்லாந்து அணிகளுக்கு இடையேயான லீக் போட்டி நடக்கிறது. இதில் டாஸ் வென்ற நெதர்லாந்து அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி நெதர்லாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக வெஸ்லி பரேசி மேக்ஸ் ஓ டாவ்ட் ஆகியோர் களமிறங்கினர். முதல் ஓவரிலேயே வெஸ்லி பரேசி அவுட் ஆனார். இதனையடுத்து கேம்ஸ் ஓ டாவ்ட் அகேர்மான் ஜோடி நிதானமாக விளையாடி ஸ்கோரை உயர்த்தினர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த மேக்ஸ் ஓ டாவ்ட் 43 ரன்னில் தேவையில்லாமல் ரன் அவுட் ஆனார். இவர் அவுட் ஆன சிறிது நேரத்தில் அகேர்மான் 29 ரன்னில் ஆட்டமிழந்தார். 92 ரன்னில் 3 விக்கெட்டுகளை இழந்த நெதர்லாந்து அணி சீரான இடைவேளியில் விக்கெட்டுகளை பறிக் கொடுத்தனர். சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் மட்டுமே நிலைத்து ஆடி 58 ரன்கள் எடுத்து அவுட் ஆனார். இதனால் நெதர்லாந்து அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 179 ரன்கள் எடுத்தது. ஆப்கானிஸ்தான் அணி தரப்பில் நபி 3 விக்கெட்டும், நூர் அகமது 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. ஆப்கானிஸ்தான் அணியின் துவக்க வீரர்களான குர்பாஸ் மற்றும் சத்ரான் முறையே 10 மற்றும் 20 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ரகமத் ஷா தன் பங்கிற்கு 52 ரன்களையும், கேப்டன் ஹஷ்மதுல்லா ஷஹிடி 56 ரன்களையும் குவித்தனர்.

போட்டி முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 31.3 ஓவர்களில் வெறும் 3 விக்கெட்டுகளை இழந்து 181 ரன்களை குவித்தது. ஆப்கானிஸ்தான் சார்பில் ஷஹிடி 56 ரன்களுடனும், உமர்சாய் 31 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

# முகமது சமிக்கு வாழ்த்து தெரிவித்த ஆப்கன் ரசிகை வைரலாகும் டுவிட்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று இலங்கை இந்தியா அணிகள் மோதின. இதில் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முதல் அணியாக தகுதி பெற்றது.

இந்த போட்டியில் 18 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றிய முகமது சமி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். இதன் மூலம் பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆனார்.

உலகக் கோப்பையில் அதிக விக்கெட் கைப்பற்றிய இந்தியர்களின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஜாகீர் கான் (23 ஆட்டத்தில் 44 விக்கெட்), ஸ்ரீநாத் (34 ஆட்டத்தில் 44 விக்கெட்) ஆகியோரை பின்னுக்கு தள்ளினார். இந்த வரிசையில் 4வது இடத்தில் பும்ரா (33 விக்கெட்) உள்ளார்.

உலகக் கோப்பையில் முகமது ஷமி ஒரு இன்னிங்சில் 5 விக்கெட் மற்றும் அதற்கு மேல் சாய்ப்பது இது 3வது முறையாகும். உலகக் கோப்பையில் அதிக தடவை 5 விக்கெட் வீழத்திய ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்கின் சாதனையை (இவரும் 3 முறை) சமன் செய்தார்.

ஒட்டுமொத்த ஒருநாள் போட்டிகளில் முகமது ஷமி 5 விக்கெட் எடுப்பது இது 4வது நிகழ்வாகும். இந்தியர்களில் அதிக முறை 5 விக்கெட் வீழ்த்தியவர் இவர் தான். ஸ்ரீநாத், ஹர்பஜன்சிங் (தலா 3 முறை) அடுத்த இடத்தில் உள்ளனர்.

பல்வேறு சாதனைகளை படைத்த முகமது சமிக்கு ஆப்கானிஸ்தான் ரசிகை சமூக வலைதளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் மைதானம் அவருக்கு சொந்தமானது. என்ன ஒரு அற்புதமான வீரர் என பதிவிட்டுள்ளார். இந்த பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# ஷார்ட் பிட்ச் பந்துகள் என்னை திணறடிக்கிறதா? காட்டமாக பதில் அளித்த ஷ்ரேயாஸ் வீடியோ



13வது உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்ற 33வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்களான இந்தியா இலங்கை அணிகள் மோதின.

முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 357 ரன்கள் குவித்தது. இதையடுத்து 358 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 55 ரன்னுக்கு ஆல்அவுட் ஆனது. இதன் மூலம் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பதிவு செய்தது.

இந்நிலையில் இந்த ஆட்டத்தில் அசத்தினாலும் ரபாடா, ஜான்சன் போன்ற தரமான ஷார்ட் பிட்ச் பந்துகளை வீசக்கூடிய பவுலர்களை கொண்ட தென்னாப்பிரிக்காவை சமாளிக்க என்ன திட்டத்தை வைத்திருக்கிறீர்கள்? என்று ஆட்டத்தின் முடிவில் ஸ்ரேயாஸ் ஐயரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு ஸ்ரேயாஸ் ஐயர் அளித்த பதில் பின்வருமாறு;

ஷார்ட் பிட்ச் பந்துகள் என்னை திணறடிக்கிறதா? நீங்கள் நான் எவ்வளவு புல் ஷாட்களை அடித்துள்ளேன் என்பதை பார்த்திருக்கிறீர்களா. குறிப்பாக அதில் எத்தனை பந்துகள் பவுண்டரிக்கு சென்றன என்பதை பார்த்தீர்களா? பொதுவாக ஷார்ட் பிட்ச் அல்லது ஓவர் பிட்ச் பந்துகளாக இருந்தாலும் நீங்கள் சரியாக அடிக்கவில்லை என்றால் அவுட்டாவீர்கள். ஆனால் அதில் நான் 2, 3 முறை அவுட்டானால் உடனடியாக இவருக்கு இன்ஸ்விங் பந்துகளை அடிக்க தெரியாது, பந்து வேகமாக வந்தால் கட் ஷாட் அடிக்கத் திணறுவார் என்று நீங்கள்தான் சொல்கிறீர்கள். பொதுவாகவே அனைத்து வீரர்களும் எந்த வகையான பந்திலும் அவுட்டாவார்கள். ஆனால் நீங்கள்தான் அவரால் ஷார்ட் பிட்ச் பந்துகளை அடிக்க முடியாது என்ற சூழ்நிலையை உருவாக்கி விடுகிறீர்கள் என்று கூறியுள்ளார். இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் வரும் 5ம் தேதி தென் ஆப்பிரிக்கா உடன் மோத உள்ளது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.